நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.24/2025

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாண்டுரங்கன் |
| தந்தை / கணவர் பெயர் | : | குஞ்சண்ணசெட்டி |
| கிராமம் | : | ஆஸ்பத்திரி காலனி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 65 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 07–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.25 PM

1. நான் தற்போது மேட்டூர் ஆஸ்பத்திரி காலனியில் குடியிருக்கிறேன். நான் ஆட்டோ ஓட்டிவருகிறேன். ஆஜர் எதிரி என்னுடைய மருமகன் ஆவார். ஆஜர் எதிரிக்கும் வேறொரு பொண்ணுக்கும் தொடர்பு இருந்தது. அதனால் என் மகளை தொந்தரவு செய்து வந்தார். என் மனைவி மேட்டூர் முனியப்பன் கோவில்

பூங்கா அருகே மிட்டாய் கடை வைத்து நடத்தி வருகிறார். அந்த கடையை எனது மனைவிதான் பார்த்து வருகிறார். சிலநேரம் எனது மகளும் வந்து பார்த்துக்கொள்வார்.

2. சுமார் 1 வருடத்திற்கு முன்பு எனது மனைவி காலை 11.00 மணியளவில் முனியப்பன் கோவில் பூங்கா அருகே கடைப்போட்டு மிட்டாய் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தார். என்னுடைய மருமகன் ஆஜர் எதிரி வேறொரு பெண்ணுடன் இருச்சக்கர வாகனத்தில் சென்று பேசிக்கொண்டிருந்ததாகவும், அவர் வந்த இருச்சக்கர வாகனத்தை எனது மனைவி டேபிள் போட்டு மிட்டாய் வியாபாரம் செய்துக்கொண்டிருந்த இடத்திற்கு வந்து டேபிள் மீது இருச்சக்கர வாகனத்தை மோதி அவரை கீழே தள்ளியுள்ளார்.
3. எதற்காக இப்படி செய்கிறாய் என்று எனது மனைவி கேட்டதற்கு அப்படி தேவடியா என்று முடியை பிடித்து இழுத்து, சேலையை இழுத்து கண்ணத்தில் மாறிமாறி அடித்ததாகவும், என் மனைவி சத்தம் போட அருகிலிருந்தவர்கள் வருவதை பார்த்து எதிரி அங்கிருந்து கிளம்பியதாகவும், என் மனைவி எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார்.
4. தகவல் தெரிந்து சம்பவயிடம் சென்று என் மனைவியை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எதிரி எடைபோடும் ½ கிலோ எடைக்கல்லை எடுத்து என் மனைவி மீது வீசியதில் அவரது உயிர்நாடியில் பட்டுவிட்டதாக என்னிடம் சொன்னார். என் மனைவியிடம் என்ன நடந்தது என்று கேட்டபோது அவர் நடந்த விவரங்களை சொல்லி நான் தெரிந்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. மேற்படி சம்பவத்தின்போது நடந்த நிகழ்வுகளை நான் நேரடியாக பார்க்கவில்லை. எனது மனைவி சொல்லித்தான் தெரியும். ஆனால் நடந்தது உண்மை. எதிரி ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பது எனக்கு நேரடியாக தெரியும். எதிரி அவ்வாறு தகாத தொடர்பு வைத்திருப்பதாக நானும், எனது மகளும் 24 புகார்கள் கொடுத்தோம். ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.
2. நான் சொன்னவாறு எந்த புகார்களும் கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு கொடுத்திருந்தால் ஒரு புகார் ரசீதாவது கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

எதிரி எனது உடன்பிறந்த அக்கா மகன் என்றால் சரிதான். எனது மகளும், எதிரியும் காதலித்து வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

3. மேற்படி இருவருக்கும் ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் உள்ளதென்றால் சரிதான். எதிரி சொந்தமாக வீடு கட்டி வைத்திருந்தார் என்றால் சரியல்ல. நான் தான் எனது மகளுக்கு வீடுகட்டி வைத்திருந்தேன். அந்த வீடு கட்டப்பட்டிருந்த இடம் எனது பெரிய மருமகள் குமுதா என்பவர் பெயரில் உள்ளது.

4. 18.03.2023 ம் தேதி எதிரியின் பெயரில் உள்ள வீட்டை எனது மகள் ரேவதி பெயரில் எழுதி வாங்கினோம் என்றால் சரிதான். நோட்டரி வழக்கறிஞர் மூலம் ஆவணத்தை பதிவுசெய்தோம். அது புறம்போக்கு நிலம் என்பதால் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்தோம். மேற்படி ஆவணத்திலேயே எனது மகளுக்கும், எதிரிக்கும் ஒட்டு உறவு இல்லை என்று எழுதிக்கொடுத்தும், விவகாரத்து பெற்றுக்கொள்ளலாம் என எழுதிக்கொடுத்தும் பிரிந்துவிட்டு அதன்பிறகு ஒரு வருடம் கழித்து கணவன் மனைவிக்கு பிரச்சனை ஏற்பட்டதாக எனது மனைவியை வைத்து பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அன்று பஞ்சாயத்து பேசி நான்கு பெரிய மனிதர் முன்பாக எழுதிக்கொடுத்துவிட்டு அன்றிரவே 4 காலி பசங்களை கூட்டிக்கொண்டு வெட்டாமல் விடமாட்டேன் என்று ஊரைச்சுற்றி சுற்றி வந்து பிரச்சனை செய்ய ஆரம்பித்து விட்டார்.

5. மேற்படி ஆவணத்தில் எதிரி சங்கீதாவுடன் தொடர்பு வைத்திருந்ததாக இல்லை என்றால் சரிதான். வேறு ஆவணத்தில் உள்ளது. அந்த ஆவணங்கள் என்னிடம் உள்ளது. காவல் துறையினரிடம் ஒப்படைத்தேனா என்று தெரியவில்லை. அவ்வாறான ஆவணமே இல்லை என்பதால்தான் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. ஊருக்கே தெரியும். என்னிடம் உள்ளது நான் தாக்கல் செய்கிறேன்.

6. நான் சொன்னவாறு புகாரில் சங்கீதாவுடன் பேசிக்கொண்டிருக்கும்போது பிரச்சனை ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. முனியப்பன் கோவில் என்பது பலநபர்கள் வந்துசெல்லும் இடம் என்றால் சரிதான். அந்த

சந்தில் நிறைய உணவுக்கடைகள் உள்ளதென்றால் சரிதான். நிறைய மக்கள் நடமாட்டம் இருக்குமென்றால் சரிதான். நான் சொன்னவாறு எதிரி என் மனைவியை தாக்கியிருந்தால் மேற்படி நேரில் பார்த்த நபர்கள் இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டிருப்பார்கள் என்றால் சரியல்ல.

7. எதிரி தாக்கியதில் என் மனைவி மயங்கி கீழே விழுந்துவிட்டதாக சொன்னார். மயக்கமான எனது மனைவியை தான் மருத்துவமனைக்கு நான் ஆட்டோவில் அழைத்துச்சென்றேன். மருத்துவமனைக்கு சென்று குளுக்கோஸ் போட்டு அரைமணிநேரம் கழித்துதான் எனது மனைவிக்கு தெளிவு வந்தது. நான் சொன்னவாறு மயக்கம் ஏற்பட்டதாக மருத்துவ ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றாலும் நான் சொன்னவாறு எனது மனைவிக்கு மயக்கம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. மயங்கிய நபரைத்தான் எடுத்து அமரவைத்து மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன்.
8. எனது மனைவி சம்பவம் குறித்து போன் செய்து தகவல் சொன்னதாக காவல் துறை விசாரணையிலும், இந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யும் போது எனது மனைவியை மயக்கம் தெளிவித்து விவரம் கேட்டபோது சொன்னார் என்றும் மாற்றி மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியும் எனது மகளும் பிரிந்து வாழ்ந்த காலத்தில் எதிரி மீது நடக்காத ஒரு சம்பவத்தை குறிப்பிட்டு பொய் புகார் அளித்ததால் தான் வழக்கு பதிவுசெய்யாமல் CSR மட்டும் கொடுத்தார்கள் என்றால் ஆள்கிடைத்தால் FIR போடுவதாக சொன்னார்கள்.
9. நடக்காத சம்பவத்தை நடந்ததாக நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-05.20 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/- நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**